**<u>அரியலூர் மாவட்ட நிலஅளவைப் பதிவேடுகள் துறை, உதவி இயக்குநர் மற்றும் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (நிஅ) அவர்களின் செயல்முறை ஆணை</u>**

******

**பிறப்பிப்பவர்: திரு. க.கண்ணன் எம்.ஏ.,**

**ந.க.அ2/1860/2023** **நாள்:3.08.2023**

| | | |
|---|---|---|
| பொருள் | - | பொதுப்பணி - நில அளவைப் பதிவேடுகள் துறை – அரியலூர் மாவட்டம் - காலஞ்சென்ற நிலஅளவர் ஆர்.முருகன் என்பவரின் வாரிசுதாரரும் – மனைவியுமாகிய திருமதி.த.கலைமதி என்பவரின் பணியை வரன்முறைப்படுத்தி அரசாணையிடப்பட்டது - இளநிலை உதவியாளர் இனத்தில் பணிவரன்முறை செய்து – ஆணையிடல் – தொடர்பாக. |
| பார்வை | - | 1.அரியலூர் மாவட்ட நிலஅளவைப் பதிவேடுகள் துறை உதவிஇயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.அ1/1604/2020 நாள்.06.04.2022.<br>2.அரசு ஆணை (3டி) எண்.133 வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை பணிகள் அலகு பணி 9(1)பிரிவு நாள்.01.08.2023 |

*****

**<u>ஆணை :</u>**

அரியலூர் மாவட்ட நிலஅளைவைப் பதிவேடுகள் துறை உதவி இயக்குநரின் கட்டுப்பாட்டின் கீழ் நிலஅளவராக பணிபுரிந்து 23.07.2020 அன்று காலமான திரு.ஆர்.முருகன் என்பவரின் வாரிசுதாரரும் மனைவியுமாகிய திருமதி.த.கலைமதி என்பவரை பார்வை-1-இல் காணும் செயல்முறை ஆணையின்படி கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக நியமனம் செய்யப்பட்டு 07.04.2022 முற்பகல் முதல் பணிபுரிந்து வருகிறார்.

பார்வை-2-இல் காணும் அரசாணையில் இவ்வலுவலகத்தில் கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்ட திருமதி.த.கலைமதி என்பவருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் அவர் பணியில் சேர்ந்த நாளான 07.04.2022 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து அரசு ஆணையிட்டுள்ளது.

எனவே, பார்வை-2-ல் காணும் அரசாணையின்படி திருமதி.த.கலைமதி என்பவரை இளநிலை உதவியாளர் இனத்தில் 07.04.2022 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

உதவி இயக்குநர்,
நிலஅளவைப் பதிவேடுகள் துறை,
அரியலூர்.

பெறுநர்:

திருமதி.த.கலைமதி, இளநிலை உதவியாளர்
(கண்காணிப்பாளர் மூலமாக)

**நகல் :பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது**

இயக்குநர்,
நிலஅளவை மற்றும் நிலவரித்திட்டம்,
சர்வே இல்லம், சேப்பாக்கம்,
சென்னை-5.

மண்டலத் துணை இயக்குநர்,
நிலஅளவைப் பதிவேடுகள் துறை,
திருச்சிராப்பள்ளி-1

பணிப்பதிவேட்டிற்கு.